# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் .......

எபிரேயர் 6:14

செய்தி மலர்
2017
ஜனவரி

இதழ் : 09
மலர் : 13



# சபை ஊழியரின் அன்பு மடல்



**சபை ஊழியரின் அன்பு மடல்**

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே. உங்கள் அனைவருக்கும் 2017–ம் புத்தாண்டு வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன். கர்த்தர்தாமே எல்லோரையும் வரும் புதிய ஆண்டிலே அபரிதமாக ஆசீர்வதிப்பாராக. கர்த்தர் நம் சபைக்கு இந்த ஆண்டு வாக்குத்தத்தமாக "நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன்னை பெருகவே பெருகப்பண்ணுவேன்"(எபி–6:14)என்ற வார்த்தையை கொடுத்திருக்கிறார். அவர் வாக்கு மாறாதவர். நிச்சயம் நம் சபையில் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதை பார்ப்பீர்கள். இந்த வாக்குத்தத்தை நாம் சொந்தமாக்கிக்கொள்ள என்னென்ன செய்யவேண்டும் என்பதை கீழ்வரும் பகுதிகளிலே பார்க்கலாம்.

## 1. ஆபிரகாம்

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பேரை பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னை சபிக்கிறவனை சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும" (ஆதி–12:1–3) என்றார். உடனே அவன் ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தைவிட்டு கானான் தேசத்திற்கு போகப்புறப்பட்டான்.

அதுபோலவே நாமும் கூட பரம கானானை சுதந்தரிக்க வேண்டுமென்றால் உலகப்பிரகாரமான சொத்து, சுதந்திரம், ஆஸ்திகள், உலக ஆசைகள், சிற்றின்பங்கள், களியாட்டுகள் போன்ற "ஊர்"களை விட்டு இயேசு கிறிஸ்துவை பின்பற்றவேண்டும் அப்பொழுது மேற்சொன்ன வாக்குதத்தம் நம் முடைய வாழ்விலும் சபையிலும நிறைவேறும். இயேசு சொன்னார் "ஒருவன் என்னை பின்பற்றி வரவிரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன்.

**<u>2.சீஷர்கள் :</u>**

அவர் கலிலேயா கடலோரமாய் நடந்து போகையில் மீன் பிடிக்கிறவர்களாயிருந்த சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலை போட்டுக் கொண்டிருக்கிற போது இயேசு அவர்களை நோக்கி என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன் உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு அவருக்கு பின்சென்றார்கள். இதே போல யாக்கோபும் யோவானும்கூட இயேசு அழைத்தபோது தங்கள் தகப்பனாகிய செபதேயுவை கூலியாட்களோடு படகிலே விட்டு இயேசுவுக்கு பின் சென்றார்கள். பிரியமானவர்களே! தங்கள் பிழைப்புக்குண்டான படவுகள், வலைகள், கூலியாட்கள் மற்றும் தம் இன ஜன பந்துக்கள் எல்லாவற்றையும் விட்டு இயேசுவின் அழைப்பிற்கு கீழ்படிந்தார்கள். ஏராளமான மீன்களைப் பிடித்து உலக சம்பத்துக்களை பெருக்குவதை விட இயேசுவுக்கு கீழ்படிவது மிகுந்த ஆசீர்வாதத்தை பெருகச்செய்யும் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

ஒருமுறை பேதுரு எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று இயேசுவைப் பார்த்துக்கேட்டான். அதற்கு அவர் தேவனுடைய இராஜ்ஜியத்தின் நிமித்தம் வீட்டையாவது, பெற்றோரையாவது, சகோதரரையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்டுவிட்ட எவனும் இம்மையிலே அதி–கமானவைகளையும் மறுமையிலே நித்தியஜீவனையும் அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். ஆகவே கர்த்தருக்கு முதலிடம் கொடுப்போம். மற்ற எல்லா ஆசீர்வாதங்களும் தாமாகவே நம்மை வந்து சேரும்.

**<u>3.லோத்து மனைவி:</u>**

கர்த்தர் சோதோம்கொமாராவின் அக்கிரமங்களும், கூக்குரலும் கர்த்தரின் சமூகத்தில் பெரியதாயிருந்ததாலே அதை அழிக்க சித்தங்கொண்டார். அந்தப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த ஆபிரகாமின் சகோதரரின் மகனாக லோத்துவுக்காக ஆண்டவரிடம் ஆபிரகாம் மன்றாடினான். அதனால் அவனைக் காப்பாற்றுவதற்காக தூதர்களை அனுப்பினார். உன் ஜீவன் தப்ப ஓடிப் போ <u>பின்னிட்டு பாராதே</u> இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப் போ என்றார். ஆனால் லோத்தின் மனைவியோ தான் விட்டுவந்த சொத்து சுதந்திரம் ஆடு மாடுகள் பொருட்கள் மீது ஆசைப்பட்டவளாக கர்த்தரின் வார்த்தையை மீறி பின்னிட்டு பார்த்தாள். அந்தோ பரிதாபம் “உப்புத் தூனாக” மாறிப்போனாள் தன் வாழ்க்கையையே இழந்தாள். பிரியமானவர்களே பவுல் சொன்னது போல “நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல் கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காக பிடிக்கபட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய் தொடர்கிறேன். சகோதரரே அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை நான் ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்” (பிலிப்–3:12–16).

பிரியமானவர்களே! விடவேண்டிய உலகப்பிரகாரமான இச்சைகளை நாம் வெறுத்துவிட்டால்தான் ஆண்டவருடைய இரட்சிப்பை சுதந்தரிக்க முடியும். இயேசு சொன்ன கெட்ட குமாரன் உவமையில் இளைய குமாரன் உலக இச்சைக்கு தன் வாழ்க்கையை இழந்தபோது தன் செய்கைக்காக வெட்கப்பட்டான். தகப்பனுடைய அன்பை புரிந்துகொண்டான். மனங்கசந்து அழுது மனம் திரும்பினான். தன் தகப்பனை நோக்கி ஓடிவந்தான். எப்படியாவது தன்னை மன்னித்து மகனாக அல்ல ஒரு வேலைக்காரனாயாவது ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடினான். தகப்பனும் அவனை மன்னித்து ஏற்றுக்கொண்டான்.(லூக்-15:11-32) " உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு, நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும் சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைப் பிடுங்கிப்போடு, நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும் ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்" (மாற்கு-9:43-48) ஆகவே எந்தெந்த உலகக் காரியமெல்லாம் தேவனை நெருங்கி அவரோடு பரிசுத்த ஜீவியம் செய்ய தடைக் கற்களாய் காணப்படுகிறதோ அவைகளையெல்லாம் இழப்பதற்கு நாம் நம்மை அர்ப்பணிக்கவேண்டும். அப்பொழுது தெய்வீக ஆசீர்வாதங்களை இம்மையிலும் மறுமையிலும் நாம் சுதந்தரித்துக்கொள்ளலாம்.

**4. <u>இஸ்ரவேல் மக்கள் :</u>**

கொடிய அடிமைத் தனத்தில் எகிப்து அரசன் பார்வோனால் ஒடுக்கப்பட்டு கூக்கிரலிட்டுக் கொண்டிருந்த அடிமைகளான இஸ்ரவேல் மக்களை மோசேயைக்கொண்டு விடுவித்து கானானை நோக்கி வனாந்திரத்தில் தேவன் அதிசய-மாக வழி நடத்தினார். செங்கடலை இரண்டாகப் பிளந்து வழி உண்டாக்கி அவர்களை பின் தொடர்ந்து வந்த பார்வோனின் சேனைகளை சமுத்திரத்திலே ஆழ்த்தினார். வானத்திலிருந்து மன்னாவைப் பெய்யப்பண்ணி போஷித்தார். காடைகளை உணவாகக் கொடுத்தார். கற்பாறைகளில் தண்ணீரை சுரக்கப் பண்ணி அவர்களின் தாகத்தைத் தீர்த்தார். அவர்கள் கால்கள் வீங்கவில்லை, வஸ்திரங்கள் பழசாகப் போகவில்லை எதிரிகள் முறியடிக்கப்பட்டனர். இவ்வளவு அற்புதமாக தேவன் வழிநடத்தினாலும் அவர்கள் மோசேயை நோக்கி முறுமுறுத்தார்கள். "எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்திரத்திலே சாகும்படிக்கு எங்களை கொண்டு வந்தீர்? எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும் வெண்காயங்களையும், வெள்ளைப்பூண்டுகளையும் நினைக்கிறோம்" (யாத்-14:11,12. எண்ணா-11:4,5)என்று சொல்லி மோசேயையும், தேவனையும் வேதனைப்படுத்தினார்கள். நாமும்கூட அநேக வேளைகளில் கர்த்தர் நமக்கு செய்து வருகிற நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் உணராமல் அவர் நமக்கு செய்வதாகக் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தங்களையும் விசுவாசிக்காமல் இஸ்ரவேல் மக்களைப் போலவே முறுமுறுக்கிறோம். ஆனால் அப்படிச் செய்யாமல் நன்றியறிதலுள்ள இருதயத்தோடு கர்த்தர் நமக்குக்கொடுத்திருக்கிற வாக்குத்தத்தங்களை உறுதியாக

விசுவாசித்து கர்த்தரைப் பற்றிக்கொள்ளும்பொழுது நிச்சயமாகவே அவர் நம்மை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து நம்மைப் பெருகவே பெருகப்பண்ணுவார். நாம் கட்டாத வசதியான பெரியப்பட்டணங்களையும், நாம் நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களாலும் நிரம்பிய வீடுகளையும், நாம் வெட்டாமல் வெட்டப்பட்டிருக்கிற துரவுகளையும், நாம் நடாத திராட்சைத் தோட்டங்களையும், ஒலிவத்தோப்புகளையும் கர்த்தர் கொடுத்து நாம் சாப்பிட்டுத் திருப்தியடையும்படி செய்வார். (உபா-6:10,11) ஆகவே பிரியமானவர்களே ஒருநாளும் ஆண்டவர் அருளும் ஆசீர்வாதங்களை உதாசீனப்படுத்தாதபடி ஜாக்கிரதையுள்ளவர்களாய் வருகிற புதிய வருஷம் முழுவதும் நம்மைக் காத்துக்கொள்வோமாக.

" ஒரு தரம் பிரகாசிக்கப்பட்டும் பரம ஈவை ருசிப்பார்த்தும் பரிசுத்த ஆவியைப் பெற்றும் தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிப்பார்த்தும் மறுதலித்துப் போனவர்கள் தேவனுடைய குமாரனை தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால் மனந்திரும்புவதற்கு ஏதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் சுட்டெரிக்கப்படுவதே அதன் முடிவு" (எபி-6:4-6)

ஆகவே ஆபிரகாமைப்போல விடவேண்டிய ஊர் என்ற கல்தேயருடைய பட்டணத்தை விடவேண்டும் சீஷர்களைப்போல வலைகளையும் படகுகளையும் கூலியாட்களையும் உறவுகளையும் விடவேண்டும் இடறல் உண்டாக்குகிற அவயவங்களை அடக்கி ஒடுக்க வேண்டும். இஸ்ரவேல் மக்களைப் போல முறுமுறுக்காமல் விட்டுவந்த பாவ பழக்க வழக்கங்களை அழித்து ஒழிக்க வேண்டும் அப்பொழுது கர்த்தர் நிச்சயமாக ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

கலப்பையின் மேல் தன் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு தகுதியானவன் அல்ல. (லூக்-9:62)

பிரியமானவர்களே! பழைய வருஷத்தின் பாடுகளையும், வேதனைகளையும், கஷ்டங்களையும் நினைக்கவேண்டாம். பழைய வருஷத்தில் செய்த பாவ காரியங்களை கர்த்தரிடம் சொல்லி அறிக்கை செய்து அவைகளை விட்டுவிட்டு மனந்திரும்பி குழந்தைகளைப் போல பரிசுத்தமடைந்து புதிய விசுவாசத்தோடு வருகிற வருஷத்திலே அதிகக் கனிகளைக் கொடுத்து சாட்சியான வாழ்க்கை வாழ கடவுளுக்கு நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர் நமக்கு பல புதிய ஆசீர்வாதங்களை தரக் காத்திருக்கிறார். கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து இப்புதிய ஆண்டிலே பெருகவே பெருகச் செய்வார். நீங்கள் இம்மையிலும், மறுமையிலும ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்பீர்கள்.

## 2017 ஆம் வருடத்தின் சபையின் வாக்குத்தத்தம்

## "நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்"

எபி 6:14

# உன்னோடே இருக்கிற கர்த்தர்

யோசுவா–1:9 "நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்"

புது வருடத்திற்குள் அடி எடுத்து வைத்திருக்கும் நமக்கு, இந்த வருடம் எப்படி இருக்குமோ? என்ற கலக்கம் இருக்கலாம். ஒருமுறை ஒரு இளம் வாலிபன், ஓர் இரவு காட்டில், தனியாக இருக்கப்போவதாக தீர்மானித்தான். தன் விருப்பத்தை பெற்றோரிடமும் நன்பர்களிடமும் தெரிவித்தான். அதற்காக ஆயத்தங்கள் செய்ய ஆரம்பித்தான் அந்த நாளும் வந்தது. மாலை நேரம் மங்க மங்க, தனிமை உணர்வு அவனை வாட்டியது. காட்டின் விசித்திரமான சத்தங்கள் அவனுக்கு பயத்தைக்கொடுத்தது. அவனால் தூங்க முடியவில்லை.அவனைச் சுற்றிலும் காரிருள் நேரம் ஆக ஆக சத்தங்கள் அதிகரித்தன. நடுநிசி நேரம், அவனது பயம் உச்ச கட்டத்திற்குப்போனது. தன்னையும் அடக்கிக் கொள்ளமுடியாமல், பயந்து சத்தமிட்டான். பதிலுக்கு ஒரு குரல் கேட்டது, " மகனே பயப்படாதே, நான் இங்கே இருக்கிறேன் அப்பா நீங்கள் இங்கேதான் இருக்கிறீர்களா ? நா தழுதழக்க அந்த வாலிபன் கேட்டான். " மகனே நான் உன்னை விட்டு எப்படி பிரிந்து போவேன்? இங்கே தான் இருக்கிறேன்" என்ற தகப்பனின் அன்புக்குரல் அந்த வாலிபனை திடப்படுத்தினது. பயமெல்லாம் ஒரு விநாடியில் பறந்து போனது.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இந்த புதிய வருடம் எப்படி இருக்குமோ என்று ஒருவேளை நீங்கள் கலங்கலாம், நீங்கள் கலங்காதிருங்கள். நம்முடைய தேவன் மிகவும் அன்புள்ள தேவன் அவர் உங்களைப் பார்த்துச் சொல்லுகிறார். "நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொன்டு திடமனதாயிரு திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார் (யோசு–1:9)அவர் நம்மை ஒருபோதும் கைவிடாத தேவன்'' நாம் பயப்படத் தேவையில்லை.

## ஆலோசனைக் கர்த்தர்:

"நம்முடைய தேவன் ஆலோசனைக் கர்த்தர்" ஆக இருக்கிறார். நாம் எந்தப் பாதையில் நடக்க வேண்டும் சூழ்நிலையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற ஆலோசனைகளைத் தருகிறார். "என் தாசனாகிய மோசே மரித்துப்போனான் இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள். வனாந்தரமும் இந்த லீபனோனும் தொடங்கி ஐபிராத்து நதியான பெரிய நதி மட்டுமுள்ள ஏத்தியரின் தேசம் அனைத்தும், சூரியன் அஸ்தமிக்கிற திசையான பெரிய சமுத்திரம் வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும்" (யோசு–1:2,4). மோசே மரித்துப் போனான் என்று நீங்கள் கவலைப்பட்டது போதும், எழுந்து புறப்படுங்கள் என்று சொல்கிறார். நான் உங்களோடு இருப்பேன் என்று திடப்படுத்துகிறார். மாத்திரம் அல்ல, நீங்கள் யோர்தானைக் கடக்க வேண்டும் என்று சொல்கிறார். கடந்த பின், அவர்கள் சுதந்தரிக்கப் போகும் தேச எல்லைகளை திட்டமும் தெளிவுமாக ஒரு புவியியல் ஆசிரியர் போல விவரிக்கிறார். நம்முடைய தேவனின் ஆலோசனைகள் மகத்தானவைகள். ஒருபோதும் அது நமக்கு குழப்பத்தைக் கொண்டு வராது. திட்டமும், தெளிவுமாக ஆலோசனைகளைத் தந்து, அவர் நம்மை வழிநடத்துவார்.

## நித்தியபிதா:

"நான் மோசேயோடே இருந்ததுபோல உன்னோடும் இருப்பேன், நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (யோசு–1:5). ஐயோ, மோசே மரித்துப் போனானே! இனி எப்படி முன்னேறுவது? என்று திகைத்து நின்ற யோசுவாவைப் பார்த்து சொல்கிறார். நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருப்பேன் என்று. ஆகார் தன் மகனோடு வனாந்திரத்தில் சென்றபோது, திகைத்து நின்றாள். குடிக்க தண்ணீர் இல்லை. உதவிசெய்ய அங்கு யாரும் இல்லை. பிள்ளையின் அழுகுரல் ஒருபக்கம் என்ன செய்வது எனத் தெரியவில்லை அவளுக்கு அந்தச் சூழ்நிலையில், தேவ சத்தம் அங்கு கேட்கிறது, தேவன் தண்ணீரைத் தந்து அந்தப் பிள்ளையைக் காப்பாற்றுகிறார்.

நம்முடைய வாழ்க்கையில் செழிப்பாக நாம் இருக்கும்போது, நமக்கு உதவிசெய்ய அநேகர் இருப்பார்கள். ஆனால் வறட்சியான சூழ்நிலை வரும்போது, எல்லோரும் கைவிட்டு விடுவார்கள். சூழ்நிலைகள் மாறலாம், நம்முடைய தேவன் நித்தியபிதா அவருடைய அன்பு ஒருபோதும் மாறாது. ஐந்து அப்பம் கொண்டு ஐயாயிரம்பேரை போஷித்த தேவன் அவர் நம்மையும் போஷிக்க வல்லவராய் இருக்கிறார்.

## பிரதான ஆசாரியர்:

தேவன் நமக்குப் பிரதான ஆசாரியராக இருக்கிறார். ஆசாரியர்களுக்கெல்லாம் தலைவனை பிரதான ஆசாரியர் என்பார்கள். ஆசாரியர்கள் தேவனுடைய ஊழியத்தை செய்பவர்கள், தேவ ஆசீர்வாதம் மக்களை சென்றடைய பாடுபடுபவர்கள். ஆபிரகாமைப் பார்த்து தேவன் சொன்னார், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் என்று யோசுவாவைப் பார்த்து ஆண்டவர் சொல்கிறார். "பலங்கொண்டு திடமனதாயிரு"இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்கு பங்கிடுவாய்" (யோசு–1:6) ஆண்டவர் யோசுவாவை பலப்படுத்தினார், திடப்படுத்தினார், எதற்காக? தேவன் தரும் ஆசீர்வாதங்களை அந்தந்த கோத்திரத்துக்கு சரியாக கொடுக்க வேண்டும். தேவன் அவனை ஒரு ஊழியக்காரனாக ஆசாரியனாக நியமிக்கின்றார். இந்தப் புது வருடத்தில் அடி எடுத்து வைத்திருக்கும் நம்மை தேவன் பலப்படுத்துகிறார், திடப்படுத்துகிறார். எதற்காக? நாம் பலருக்கும் ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும். இரட்சிப்பின் சுவிசேஷத்தை பலருக்கும அறிவிக்க தேவன் நம்மை ஆசாரியர்களாக நியமிக்கிறார். நாம் பிரதான ஆசாரியனாகிய தேவனுக்கு ஊழியம் செய்யும் ஆசாரியர்கள் இதை ஒருபோதும் மறக்கக் கூடாது.

போதகர் சிறந்த ஆசிரியர், மாணவர்களுக்கு சிறந்த முறையில் போதிப்பார், பரீட்சையில் எப்படிப்பட்ட கேள்விகள் வந்தாலும் எழுதத்தக்கதாக அவர்களுக்கு பயிற்சியைக் கொடுப்பார். நம் தேவன் சிறந்த போதகர். அவருடைய பிரசங்கம் வல்லமையும் அதிகாரமுமாய் இருந்தது. எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாம் வெற்றிப்பெற வேண்டும் என்று போதிப்பவர் அவர். வெற்றி பெருவதற்கு சிறந்த ஆசிரியர் மட்டும் இருந்தால் போதாது. அவரிடம் பயிலும் மாணவனும், சொற்படி கேட்டு நடக்கும் சிறந்த ஒரு மாணவனாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் வெற்றி கிடைக்கும். யோசுவாவைப் பார்த்து தேவன் சொல்கிறார். " என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின் படியெல்லாம் செய்யக்கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு" (யோசு–1:7) வெற்றி கிடைப்பதற்கு, யோர்தானைக் கடப்பதற்கு எரிகோவை மேற்கொள்வதற்கு, ஆசீர்வாதங்களை சுதந்தரிப்பதற்கு யோசுவாவும், ஜனங்களும் செய்ய வேண்டிய ஒரு காரியம் அவருடைய வார்த்தைகளின்படி நடக்கவேண்டும். நம் தேவன் சிறந்த ஒரு போதகர் கீழ்படிவது எப்படி முடியும் எனக்கற்றுத் தருகிறார். "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்" (யோசு–1:8). தேவனுடைய பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்விலே, வீழ்ந்து போவதற்குக் காரணம் அவர்கள் வேதத்தை ஒவ்வொரு நாளும் வாசிக்கிறார்கள் ஆனால் தியானிப்பது கிடையாது, வேத வசனங்களை இரவும் பகலும் தியானிக்கிற மனுஷன் பாக்கியவான்.

இந்தப் புது வருடத்திலே, நேரமெடுத்து வசனங்களை வாசிப்பது மாத்திரமல்ல, தியானிக்கவும் செய்வோம். தேவன் தாமே நமக்கு ஆலோசனைக் கர்த்தராக, நித்தியபிதாவாக, பிரதான ஆசாரியராக, போதகராக இருந்து நம்மை வழிநடத்துவாராக. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

**ஜா.கிருஸ்டோபர் தேவராஜ்**

# இரட்டிப்பான பலன்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணகர்த்தராகிய அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்! வாழ்க்கையில் ஏமாற்றங்கள், ஆசீர்வாதங்களை எதிர்பார்த்த இடத்தில் இழப்புகள், நம்பினவர்கள் கைவிட்டார்கள், எதிர்பார்த்த காரியங்களில் தோல்வி, மற்றவர்களுடைய நகைப்புக்கும், நிந்தைக்கும் உள்ளாகி வெட்கமான நிலைமைக்குள் புதையுண்டு அகப்பட்டிருக்கின்ற நிர்பந்தமான சூழ்நிலைகளை பிறரோடும் பகிர்ந்து கொள்ள முடியாமல் தடுமாறி நிற்கின்ற உங்களைப் பார்த்துத் தேவன் சொல்லுகிறார். "உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக, இரண்டத்தனையாய்ப் பலன் வரும் (ஏசாயா – 61:7) நம்முடைய தேவன், தம்முடைய பிள்ளைகள் வெட்கம் அனுபவிப்பதைப் பார்த்து அமைதியாய் இருக்கிறவர் அல்ல. உங்களை வெட்கத்துக்குள்ளாக்கும் சத்துரு ஜெயம் பெறாதபடி பாதுகாத்து, வெட்கம் அனுபவிக்கிற அதே ஸ்தானத்தில் தமது இரட்டிப்பான பலனை அருளி ஆசீர்வதித்துக் கனப்படுத்துகிற தேவன்! வேதத்தில் நாம் பார்க்கும்போது யோபுவின் வாழ்வில் வெட்கத்துக்குள்ளாக்கின சிறையிருப்பின் வாழ்வை மாற்றி, இரட்டிப்பான பலனால் நிரப்பி, வெட்கத்தை அனுபவித்த அதே இடத்தில் யோபுவை தேவன் உயர்த்தினார்! (யோபு–42:10). இதே நம்முடைய தேவன் உங்களையும் எல்லா இக்கட்டுக்கும், வெட்கத்துக்கும் நீங்கலாக்கி இரட்டிப்பான பலனால் நிரப்பி உங்களை உயர்த்தும்படிக்கு

**1.எக்காலத்திலும் கர்த்தரைத்துதியுங்கள்.**

யோபு சுகமாய் வாழ்ந்திருந்த நாட்களில் ஒருநாள் யோபுவுக்கு இருந்த ஐசுவரியங்கள் முதல் பிள்ளைகள் வரைக்கும் யோபுவுக்கென்று இருந்த எல்லாம் அழிக்கப்பட்டுப் போயிற்று (யோபு 1:13–19) எல்லாவற்றையும் இழந்து தனித்தவனாய் தரித்திரத்தில் தள்ளப்பட்ட செய்தி வந்தபோது அந்த கொடிய இழப்பில் "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்"(யோபு 1:21) என்று தேவனை துதித்தார். இழப்பிலும் தேவனை துதிக்கின்ற வாழ்வில் தேவன் தமது இரட்டிப்பான ஆசீர்வாதத்தை தந்து நம்மை உயர்த்துகிறார். தாவீதின் அனுபவத்தில் அபிமெலேக்கால் துரத்திவிடப்பட்ட நிர்பந்தமான நிலைமை வந்த போது சொல்கிறார். "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர் துதி எப்போதும் என்வாயிலிருக்கும் (சங்கீதம் 34:1). எனக்கு அன்பானவர்களே! இழந்தேன் என்று கூறி வாழ்வில் சந்திக்கின்ற இழப்புகளை, அனுகூலமற்ற சூழ்நிலைகளை எண்ணி சோர்ந்து போகாமல் எல்லாவற்றிற்க்காகவும் கர்த்தரைத் துதியுங்கள். காரணம், நாம் இந்த உலகத்தில் வரும்போது எதையும் கொண்டுவரவில்லையே, மட்டுமல்ல நாம் போகும்போது எதையும் கொண்டுபோவதுமில்லை. ஆகையால் எந்த சூழ்நிலையிலும் கர்த்தர் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு கிருபையினால் பாதுகாத்து நடத்தி வருகின்றார் அல்லவா!

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## 2016 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில்

1. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன் (2யோவ 9)
2. பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் (1பேது 5:2–4)
3. பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவன் அந்திக்கிறிஸ்து. (1யோவ 2:22)
4. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்புகிறார் (2பேது 3:9)
5. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் (1யோவ 2:5)
6. கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளப்போதகர்களும் தந்திரமான வார்த்தைகளை உபயோகப்படுத்துவர். (2பேது 2:1)
7. என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை என்கிறார் (3யோவா 4)
8. தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார். (1பேது 1:20)
9. அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்(1யோவ 2:28)
10.அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.(1பேது 3:4)
11. மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய, இவைகள் உலகத்தினாலுண்டானவைகள் (1யோவா 2:16)
12. தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. (1யோவா 4:9)
13. ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள் (1பேது 1:23)
14. விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் (1பேது 5:9)
15. அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான் (1யோவா 3:24)

## 2016 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. ஷீபா பிரசாத்
Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. சுபா ஸ்டீஃபன்
Sis. டெய்ஸி எபிநேசர்
Sis. நித்தியா ஜோன்ஸ்
Sis. தங்க மெல்பா சாமுவேல்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. ஜீனா சதீஷ்குமார்

Bro. ஜாண்
Bro. ஜாண்ஸன்
Bro. கண்ணன் ஜெபராஜ்
Bro. டேவிட் பாஸ்கான்

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; . . . " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜெனட் ஆரோக்கியதாஸ்
செல்வி. சுனிதா சுந்தர்ராஜ்
செல்வி. ஷெரின் பெனிட்டா ஸ்டாலின்
செல்வி. அக்சாள் நிசி எபிநேசர்
செல்வி. காருண்யா ரவிச்சந்திரன்
செல்வி.புவனேஸ்வரி ஜெயக்குமார்
செல்வி.பிரின்ஸி கமலநாதன்
செல்வி.மோனிஸா ஜெயக்குமார்

செல்வன். கிப்டி ஆல்பர்ட்

சகோதரி. சுசீலா லாசர்
சகோதரி. லைலா ஆல்பர்ட்
சகோதரி. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்
சகோதரி. சுமதி ஐசக் துரை

சகோதரி. ஹில்டா பால் பாண்டியராஜ்
சகோதரி. விக்டோரியா ராஜன்
சகோதரி. பிரிஸ்சில்லா அந்தோனிசாமி
சகோதரி. ஹெப்சிபா ஸ்டீபன்
சகோதரி. பிரிஸ்சில்லா செங்குட்டுவன்
சகோதரி.சுரேயா

சகோ. இயேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோ. ஐசக்துரை
சகோ. வேதநாயகம் ஜஸ்டஸ்
சகோ. ஸ்டான்லி பிரேம்குமார்
சகோ. செங்குட்டுவன்
சகோ. ஆரோக்கியராஜ்
சகோ. சுபின் சிங்
சகோ.ராஜேஸ் குமார்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி – திரு. தம்புகுமார் டென்னிஸ்
திருமதி – திரு. வில்கின்ஸ் தினகரன்
திருமதி – திரு. சாம் ஆனந்த்
திருமதி – திரு. கனிஸ் ஜேஸ்வா அமலன்
திருமதி – திரு. ஜஸ்டஸ்
திருமதி – திரு. சாமுவேல்
திருமதி –திரு. இயேசுரெத்தினம்
திருமதி – திரு. வேளாங்கண்ணி
திருமதி – திரு. மணிராஜ்
திருமதி – திரு.சர்மன் ராஜ்

# 2017 ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/01/2017 | புது வருட ஆராதனை மாலை 4:40 முதல் 6:30 வரை | |
| 08/01/2017 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. பால் ஜெகநாதன் |
| 15/01/2017 | சகோ. தாமஸ் | சகோ. சுகுமார் |
| 22/01/2017 | சகோ. ரவி ஜான் பீட்டர் | சகோ. எபிநேசர் |
| 29/01/2017 | சகோ. ஐசக் துரை | சகோ. ஆரோக்கியதாஸ் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/01/2017 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. ஜெயசேகர் |
| 13/01/2017 | சகோ. அற்புதராஜ் | சகோ.ஆசீர்வாதம் |
| 20/01/2017 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27/01/2017 | சகோ. ரவிச்சந்திரன் | சகோ. கிறிஸ்டோபர் |

**12 /01 /2017** அன்று முழு இரவு ஜெபம் (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் )
நேரம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை

**23/01/2017** அன்று மாதாந்திர பெண்கள் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:30
(சகோதரி –டெய்ஸி எபிநேசர் அவர்கள் சார்பாக நடைபெறும் )
(வேத வினா பகுதி பின்னர் அறிவிக்கபடும்)

**27/01/2017** அன்று மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(வேத வினா பகுதி பின்னர் அறிவிக்கபடும்)

# 2017 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. ஒரு நாயாகிலும் தன் நாவை அசைப்பதில்லை என்று சொன்னவன் யார்?
2. ஆரோனின் மனைவி பெயர் என்ன?
3. மேசேயின் மனைவி பெயர் என்ன?
4. தன் முகம் பிரகாசிப்பதை அவன் அறியாதிருந்தான் அவன் யார்?
5. அக்கினி ஜீவாலையில் மோசேக்கு தரிசனமானவர் யார்?
6. மீதியான் தேசத்து ஆசாரியன் (மோசேயின் மாமன்) பெயரென்ன?
7. எங்கள் அக்கிரமத்தையும், எங்கள் பாவத்தையும் மன்னித்து எங்களை உமக்கு சுதந்திரமாக, ஏற்றுக்கொள்ளும் என்றது யார்?
8. பாவ அறிக்கை செய்து "கர்த்தர் நீதியுள்ளவர்" என்று சொன்னது யார்?
9. மிகவும் பெரியவனாய் இருந்தான் இவன் யார்?
10. பரிதானம் பார்வையுள்ளவனை குருடாக்கும் என்று சொன்னவர் யார்?
11. கருக்கான கல்லினால் தன் மகனுக்கு விருத்தசேனம் பண்ணினவள் யார்?
12. ஒரு பலி பீடத்தை கட்டி அதோடு பன்னிரெண்டு தூண்களையும் நிறுத்தினவன் யார்?
13. திரளான தண்ணீர்களின் மேல் ஈயம் போல அழிந்து போனவர்கள் யார்?
14. கல்லை போல ஆழங்களில் அழிந்துபோனவர்கள் யார்?
15. அறுநூறு பிரதான இரதங்களையுடைவன் யார்?

விடைகளை வருகின்ற 20-01-2017 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatsapp மூலமும் அனுப்பலாம் # 66015503)விடைகளை வேதாகமத்தில் யாத்திராகமத்தில் பதிலைத் தேடுங்கள் .

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல.

## – – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –

மத்தேயு *7:7*

 அதற்காக அகமகிழ்வுடன் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள், இழப்புகள், தோல்விகள், ஏமாற்றங்கள், பல தீமையான காரியங்கள் வாழ்வை நெருக்கும் போது கர்த்தரை துதிக்க! துதிக்க! உங்கள் வாழ்வை அழிக்க சோதனைகளை கொண்டு வருகிற பொல்லாத சாத்தான் உங்களை விட்டு ஓடிப்போவான்

இரட்டிப்பான ஆசீர்வாதத்தின் வாசல் உங்களுக்காக திறக்கப்படுவதை கண்டு அனுபவிப்பீர்கள்!

**2.பாவத்துக்கு இடம் கொடாதிருங்கள்:**

"இவையெல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவுமில்லை, தேவனைப்பற்றி குறை சொல்லவுமில்லை" (யோபு 1:22). தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்வில் சோதனைகளை கொண்டுவந்து தேவனுக்கு விரோதமாக பேசி பாவத்துக்கு இடம் கொடுக்கசெய்து தேவனை விட்டுவிலகச் செய்வதே பிசாசின் தந்திரம். ஆகையால், பிசாசுக்கு எதிர்த்து நின்று பரிசுத்த வாழ்வை காத்துக்கொள்ள தெளிந்த புத்தியுள்ளவர் களாக விழிப்புடன் இருங்கள் "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது" (ஏசாயா 59:2) தன் மனைவியினால் வெறுக்கப்பட்ட நிர்ப்பந்தமான வேதனையின் உச்சக்கட்டத்திலும் யோபு பாவம் செய்யாதபடி தன்னைக் காத்துக்கொண்டார்.(யோபு 2:10) எந்த சூழ்நிலையிலும், வார்த்தையிலும், செய்கையிலும் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடி பரிசுத்தத்திலும், உத்தமத்திலும் நிலைநிற்க அற்பணியுங்கள் வெட்கத்துக்கு பதிலாக இரண்டத்தனையான பலனை பெற்றுக்கொள்வீர்கள்.

**3.பிறருக்காக ஜெபியுங்கள்:**

"யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன்னிருந்த எல்லாவற்றை பார்க்கிலும் இரண்டத்தனையாய் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்". (யோபு 42:10) யோபு சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தார், இவர்கள் யோபுவின் உபத்திரவத்தில் யோபுவை நித்தித்தவர்கள்(யோபு 4:5-9). எனவே தான் யோபு சொன்னார் என் சிநேகிதர் என்னை பரிகாசம் பண்ணுகிறார்கள். வேதம் சொல்லுகிறது, உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர் களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். மற்றவர்களின் மீட்புக்காக தாகத்தோடும், ஆத்தும பாரத்தோடும், கிறிஸ்துவின் அன்பில் நிறைந்தவர்களாய் உங்களை அர்ப்பணியுங்கள். கட்டாயம் தேவன் உங்கள் சிறையிருப்பை, நிந்தையை, வெட்கமான நிலைமையை மாற்றி நீங்கள் வெட்கத்தை அனுபவிக்கிற அதே இடத்தில் உங்களை ஆசீர்வாதமாக மாற்றி உயர்த்தி உங்களுக்கு புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச்செய்வார்.

கிருபை உங்களோடிருப்பதாக!

# உங்கள் சிந்தனைக்கு

பிரியமான சகோதர சகோதரிகளே நம் ஆவிக்குரிய நிலையில் செழிப்பதற்கு கீழ்காணும் வரிகளை சற்று சிந்திப்போம்

1. பாவங்களை செய்வதை நிறுத்திவிடுவதினால் ஒருவன் பரிசுத்தமடைய முடியாது. பாவங்களை பிறப்பிக்கும் வேர்கள் பிடுங்கபடுவதினாலேயே நாம் பரிசுத்தமடைய முடியும்.

2. மனிதன் நற்கிரியைகளை செய்வதால் அவன் சற்குணனாக முடியாது. அவன் தெய்வீக குணங்களை இயற்கையின்படி (சுபாவப்படி) பெறவேண்டும்.

3. தமிழ் தெரியாத ஒருவர் தமிழர்களோடு சேர்ந்து குடியிருந்து, வேலை செய்து நாள்பட பழகுவதால் தமிழ் மொழியை பேசவும், தமிழர்களின் பழக்க வழக்கங்களை கற்றுக் கொள்ளவும் மாறிவிடுவது போல தேவனோடு வைக்கிற ஐக்கியத்தினாலேயே தெய்வீக சுபாவங்களுக்கு (தேவ இலட்சனங்களுக்கு) உரிமையாளனாகிவிடுகிறான் . இது சிநேகத்தினால் ஆகும் பயன், நீங்கள் தேவனுடைய சிநேகனாயிருக்கிறீர்களா?

4. மனிதனுடைய இரத்தத்திலே அநேகவிதமான சத்துக்கள் சேர்ந்துள்ளன. இரத்த ஓட்டத்தினால் தசைகள் அதிலுள்ள தசை சத்துக்களை எடுத்துக் கொண்டு தசையாக வளருகிறது. எலும்புகள் அதிலுள்ள எலும்பு சத்துக்களை எடுத்துக் கொண்டு எலும்பாக வளருகிறது. இதே போல நம் கண்கள் காணாவிட்டாலும் நாள் தோறும் வேதத்தை தியானித்து தேவனுடைய சுபாவங்களை நமது இருதயத்தில் சிந்தித்துக் கொண்டே இருக்கும் போது நாமும் அவருடைய சுபாவங்களுக்கு உரிமையாளர்களாய் மாறிவிடுவது இயற்கையாய் நடந்தேறுகிற காரியமாய் இருக்கிறது.

5. மோசே தேவனோடு 40 நாட்கள் சஞ்சரித்ததினால் அவர் முகம் ஜனங்கள் பார்க்ககூடாத அளவுக்கு பிரகாசித்தது. ஆகையால் மோசே முக்காடு போட வேண்டியதாய் இருந்தது. 40 நாள் தேவனோடு சம்மபாஷிப்பது அப்படிபட்ட மகிமையை உண்டாக்குமானால் ஜீவிய காலமெல்லாம் அவருடைய பிரசன்னத்தை உணரும் நம்மில் அந்த மகிமை எவ்வளவு தங்குமென்று சிந்தியுங்கள். இரும்பு காந்தத்தோடு இருக்குமானால் இரும்பிலும் காந்தசக்தி ஏறிவிடுவது இயற்கையே. நமது ஜெபமும் தியானமும், கர்த்தரில் நிலைத்திருந்தலை உண்டாக்குமானால் நாமும் அவரது மகிமையை பெற்றுக் கொள்வோம் என்று நம்புங்கள்.

6. சீஷர்களோடு இருக்க வேண்டிய யூதாஸ், சீஷர்களோடு இராமல் ஒரு மணிநேரம்தான் இயேசுவின் சமூகத்தை விட்டு ஆசாரியர், வேதபாரகர், கூட்டத்தில் ஆலோசனை செய்ய போனான். அவன் நாண்டுகொண்டு சாக அதுவே காரணமாயிற்று. நீங்கள் ஜெப நேரத்தை திருடுகிறீர்களா? ஆராதனை நேரத்தை திருடுகிறீர்களா? ஜாக்கிரதை.

7. இயேசுவை சிலுவையில் வைத்து ஆணி அடிக்கும் பொழுது பீறிட்டு வந்த இரத்தம் சேவகர் அநேகர் மேல் பட்டது. ஆயினும் அவர்களில் ஒருவர் கூட இரட்சிக்கப்படவில்லை. ஆனால் அவரது இரத்தத்தின் வல்லமையை விசுவாசிக்கிற கோடிக்கணக்கான விசுவாசிகளின் பாவங்களை மன்னிக்க கடந்த 2011 வருடங்களாக அவரின் இரத்தம் வல்லமையுள்ளதாய் இருந்து வருகிறது.கண்டு விசுவாசிப் பதை விட காணாமல் விசுவாசிப்பவர்கள் பாக்கியவான்கள்.

8. இயேசுவின் அங்கியின் ஓரத்தை தொட்ட ஸ்திரியின் வியாதி நீங்கி உடனே சுகம் பெற்றாள். ஆனால் இயேசுவை சிலுவையில் அறைந்த பின் அவரது அங்கியை சீட்டு போட்டு எடுத்துக் கொண்டவனுக்கு என்ன சுகம் கிடைத்திருக்கும்?

## ஹெலன் ரோஸ்வியர் (1925)

ஹெலன் ரோஸ்வியர் 1925–ம் ஆண்டு ஹெர்ட்போர்ட்வியரில் ஹெஸ்லிபரி என்ற இடத்தில் பிறந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்து வந்தபோது, மெய்யான விசுவாசம் கொண்ட சில மாணவிகளின் அற்புதமான சாட்சியின் வாழ்க்கை இவரைச் சிந்திக்கும்படி செய்தது. இருபது வயதான இவர் தனது போலியான வாழ்க்கையை எண்ணிப் பார்த்து மனம் கலங்கினார். தானும் மெய்யான சமாதானத்தைப் பெற வேண்டுமென்ற வாஞ்சையால், கிறிஸ்துமஸ் விடுமுறையின் போது, வேறெதிலும் அதிகக் கவனம் செலுத்தாது ஒவ்வொரு நாளும் வேதாகமத்தைக் கவனமாகப் படிக்கத் துவங்கினார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்ற வசனம் அவரது இருதயத்தைத் தொட்டது. இவர் மனந்திரும்பி தனது மாய்மாலமான வாழ்க்கையை அறிக்கையிட்டு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஹெலன் காலப்போக்கில் தான் ஒரு மிஷனெரி ஆக வேண்டுமென்ற வாஞ்சையைப் பெற்றார். கிறிஸ்துவை நான் நேசிக்கத் துவங்கியபோதே அருட்பணி செய்ய வேண்டும் என்பதைத் தவிர மற்றவை அனைத்தும் இரண்டாம் பட்சமாக ஆகிவிட்டன என்று ஹெலன் குறிப்பிட்டுள்ளார். ஹெலன் தனது மிஷனெரி பாரத்தை தன் தகப்பனாரிடம் தெரிவித்தபோது அவர் அதிர்ச்சியடைந்தார். தன்னடைய மகள் ஒரு மருத்துவராக வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாக இருந்தது. தந்தையின் விருப்பத்தைத் தட்டிக்கழிக்க ஹெலன் விரும்பவில்லை. எனவே அவர் மருத்துவ அருட்பணியாளராக ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார். ஜெபத்தில் காத்திருந்த அவர் அதுவே தன்னைக் குறித்த தேவனுடைய சித்தம் என்பதைத் திட்டமாக உணர்ந்தார். நியூஹாம் கல்லூரியில் படித்து, 1951–ம்ஆண்டு தனது 21–ம் வயதில் மருத்துவத்தில் பட்டம் பெற்றார். உடனடியாக ஆப்பிரிக்க அருட்பணி மையத்துக்கு விண்ணப்பம் அனுப்பினார்.

ஆப்பிரிக்க அருட்பணி மையம் இவரை காங்கோ நாட்டில் இபாம்பி என்ற இடத்துக்குச் செல்லும்படி சொன்னது. முன்பின் தெரியாத இடமாயிற்றே அவர்க–ளது மொழி தெரியாதே என்றெல்லாம் எண்ணித் தயங்காமல், தன்னை முழுவதுமாகத் தேவனுடைய கரங்களில் ஒப்புக் கொடுத்து விசுவாசத்தோடு புறப்பட்டார். தனது 28–வது வயதில் ஆப்பிரிக்கா சென்ற டாக்டர் ஹெலன் இபாம்பியில் ஒரு சிறிய மருத்துவமனையைத் துவக்கினார். அவருக்கு உதவியாக ஒருவருமேயில்லை. மொழிப் பிரச்சனையும் அவருக்குப் பெரிய இடையூறாக

போதுமான மருந்துகளும் கிடைக்கவில்லை. இவ்வளவு பிரச்சனைகளும் அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைந்துவிட்டன. ஹெலன் இன்னும் அதிகமாகத் தேவனைச் சார்ந்து செயல்படத் துவங்கினார். தன்னிடம் சிகிச்சைக்காக வந்தவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றியும் அவர் அருளும் ஆவிக்குரிய குணமாகுதலைப் பற்றியும் ஜெபத்தோடு எடுத்துக்கூறினார். அதுவரை நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத பலர் கிறிஸ்துவை அறிந்துகொள்ள தேவன் கிருபை செய்தார். 16 வயதான ஜாண் மங்காடிமா மூலம் தாய்மொழியாகிய ஸ்வாஹிலி மொழியை கற்றுக்கொண்டார். உள்ளூர் மொழியை நன்றாகப் பேசக்கற்றுக்கொண்ட ஹெலன் பயிற்சி பெற்ற உள்ளூர்வாசிகளின் துணையோடு 2 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையையும் கட்டி முடித்தார். வசதியற்ற காட்டின் நடுவே 5 துணை செவிலியர்களுடன் அமைக்கப்பட்ட இந்த மருத்துவமனை ஒருபெரிய
சாதனையே. ஹெலன் மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார்.

சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் புத்துணர்வைப் பெற்றிருந்த டாக்டர் ஹெலன் 1960–ம் ஆண்டில் ஆப்பிரிக்கா திரும்ப எண்ணியபோது காங்கோ நாட்டின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டிருந்தது. நீண்ட காலமாக பெல்ஜியம் நாட்டுக்கு அடிமைப்பட்டுக்கிடந்த காங்கோ மக்கள் தங்கள் விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருந்த வேளை அது.

காங்கோ நாட்டில் ஏற்பட்ட கலகங்களுக்கும் வன்முறைகளுக்கும் தப்பி பிழைக்கும்படி வெள்ளைக்காரர்கள் நாட்டை விட்டு வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட வேளையிலும் துணிவோடு அந்த நாட்டுக்குச் சென்றார். 3 வாரத்துக்குள் உள்நாட்டுபோர் காங்கோவில் துவங்கியது. மிஷனெரி பணித்தளங்கள் மூடப்பட்டன. மிஷனெரிகளைத் திரும்பி வரும்படி அருட்பணி மையங்கள் கட்டளையிட்டன. ஆனால் ஹெலன் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டார். அடுத்த நான்கு ஆண்டுகள் புரட்சி படை வீரர்களின் பல சித்திரவதைகளை விசுவாசத்தோடு சகித்துக்கொண்டார். இவர் தாக்கப்பட்டார், அடிக்கப்பட்டார், அவமானப்படுத்தப்பட்டார். இறுதியாக சிம்பா படைவீரர்களால் கைது செய்யப்பட்டார். ஐந்து மாதங்கள் ஹெலன் சிறை வைக்கப்பட்டார்.

சிறையிலும் கிறிஸ்துவைப் பற்றி கூறி, தன்னுடைய சமாதானத்தை அவர்க ளோடு பகிர்ந்து கொண்டார். தன்னைப் பிடித்துச் சித்திரவதை செய்தவர்களின் மொழியை ஹெலன் அறிந்திருந்தபடியால், அவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றித் துணிவோடு எடுத்துக் கூறினார்.

1964-ம் ஆண்டு இறுதியில் சர்வ தேசப்படையினர் ஹெலனை சிறையிலிருந்து விடுவித்தனர். புத்தாண்டு தினத்தன்று ஹெலன் விமானம் மூலம் இங்கிலாந்து திரும்பி வந்தார். ஹெலன் உருவாக்கின மருத்துவமனை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது என்றும் கவனிப்பாரில்லாமல் நோயாளிகள் தவிக்கிறார்கள் என்றும் உருக்கமான கடிதமொன்றை ஜாண் மங்காடிமா எழுதி அனுப்பியிருந்தார். கடிதத்தைப் படித்த ஹெலன் அங்கே திரும்பிச் சென்று நிலைமையைச் சீர் செய்ய வேண்டும் என்ற பாரத்தைப் பெற்றார். தன்னை விசுவாசத்தில் பலப்படுத்தும்படி ஹெலன் தேவனுடைய உதவியை நாடினார். தனது 41-வது வயதில் 1966-ம் ஆண்டு ஹெலன் மறுபடியுமாக காங்கோ நாட்டுக்குத் திரும்பினார். டாக்டர் படிப்பை முடித்திருந்த ஜாண் மங்காடிமா, மருத்துவ மனையின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருந்ததைக் கண்டு ஹெலன் மகிழ்ச்சியடைந்தார். ஒரு நற்செய்திப் பணி மருத்துவ மையத்தை உருவாக்கினார். இந்த மையத்தில் ஒரு மருத்துவப் பயிற்சிக் கல்லூரி அருட்பணி மருத்துவர்கள் வந்து செல்ல ஒரு விமான ஓடுபாதை மற்றும் வடகிழக்கு காங்கோ காட்டுப் பகுதியில் நான்கு சிறு மருத்துவமனைகள் ஆகியவற்றை அமைத்தார். பல்வேறு அருட்பணி அமைப்புகளின் மருத்துவமுயற்சிகளை ஒருங்கிணைப்பதும், பயிற்சிக் கல்லூரிக்கு அரசு அதிகாரத்தைப் பெறுவதுமே ஹெலனின் நோக்கமாக இருந்தது. விசுவாசத்துடன் செயல்பட்டார். பத்தாண்டுக்குள்ளாக ஹெலனின் 24 ஆண்டு காலக் கனவுகள் நிறைவேறும்படி தேவன் கிருபை செய்தார். நாடெங்கும் ஒன்றோடொன்று தொடர்புகொண்ட சிறு மருத்துவமனைகள் நிறுவப்பட்டன.

1971-ம் ஆண்டு டாக்டர் ஜாண் மங்காடிமாவை மருத்துவமனையின் இயக்குநராக ஹெலன் நியமித்தார். அதே நாள் பயிற்சிக் கல்லூரிக்கு அரசு அங்கீகாரமும் கிடைத்தது. அதற்காக தேவனைத் துதித்தார், இரண்டு ஆண்டுகள் கழித்து டாக்டர் ஹெலன் தனது 48-வது வயதில் காங்கோ நாட்டிலிருந்து விடைபெற்றார். காங்கோ நாட்டைவிட்டு வந்த போதிலும் ஹெலன் தனது அருட்பணி ஊழியத்தைக் கைவிடவில்லை. உலக அருட்பணி அமைப்பின் பிரதிநிதியாக உலகெங்கும் சென்று விசுவாசமுள்ள வாலிபர்களும், இளம்பெண்களும் அருட்பணி செய்ய முன் வரவேண்டுமென்று அறைகூவல் விடுத்து வருகிறார். சுவிசேஷத்தை மற்றவர்களும அறியச் செய்வதற்காகவே நாம் இந்தக் குறுகிய கால வாழ்க்கையைப் பெற்றுள்ளோம் என்பதே அவரது அறைகூவல்.

# அன்புக்கு கீழ்படிதல்

## விசுவாசம்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

இந்த புது வருடத்தை ஆரம்பித்து கொடுத்த ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கடந்த வருடத்தில் நம்மை கண்மணிபோல் பாதுகாத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுகம், ஜீவன், பெலன், நீடிய ஆயுளை கொடுத்து அவர்களின் தேவைகள், விண்ணப்பங்களை கேட்டு நம் குடும்பங்களுக்கு தேவன் செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றி கடன் செலுத்துவோம். கர்த்தர் இரக்கமும், உருக்கமும், நீடிய சாந்தமும், கிருபையும் உள்ளவர். நம்முடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் மன்னிக்கிற தேவனாகிய கர்த்தர், தம்முடைய குணாதிசியங்களால் நம்மை ஆசீரவதிக்கின்றார்.

அன்பு: உன்னிடத்தில் அன்பு கூருவது போல் பிறரிடத்திலும் அன்பு கூரு" என்று கூறின ஆண்டவர் நம்மேல் அன்பு கூர்ந்து எத்தனை நன்மைகள் செய்கிறார் என்று பார்ப்போம். (சங்கீதம்-103:3-5) அவர் அன்புள்ள தேவன் நம்முடைய அக்கிரமங்களையும் பாவங்களையும் மன்னிக்கிற தேவனாயிருக்கிறார். பல வேளைகளில் உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு காத்து வருகிறார். உன் குடும்பத்திலும் வேலை ஸ்தலங்களிலும் பாதுகாக்கிற தேவன் நம்மோடு இருக்கிறார். இப்படி ஆண்டவர் நம்மிடம் அன்பாக இருக்கும் போது நாம் திருப்பி அவருக்கு என்ன செலுத்தவேண்டும், யாத் 20:6 என்னிடத்தில் அன்பு கூர்ந்து என் கற்பனைகளை கை கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவராய் இருக்கிறேன் என்று கூறுகிறார். நாமும் அதிகாலையில் வேதம் வாசித்து தியானித்து அவர் வழிகளிலும் வார்த்தைகளிலும் நடக்கும் போது கர்த்தர் நம்மை ஆசீரவதிப்பார்.

விசுவாசம் : விசுவாசத்தின் தகப்பன் என்று ஆபிரகாம் அழைக்கப்பட்டார். ஆதி 15:5,6 உன் சந்ததி வானத்தின் நட்சத்திரங்கள் போல இருக்கும் என்று ஆசீரவதித்தார். பின்பு ஆதியாகமம் 15: 4-6 நான் உன்னை திரளான ஜனங்களுக்கு தகப்பனாக வைப்பேன் என்று ஆசீரவதித்தார். யோசுவா ஆண்டவருடைய வார்த்தைகளை விசுவாசித்து நடந்த பொழுது எரிகோ பட்டணத்தாரை முறியடித்தார்கள். நாமும்கூட நம்முடைய விண்ணப்பங்களை ஆண்டவரிடம் கேட்கும் போது அவர் நமக்கு அருளிச் செய்வார் என்ற விசுவாசத்தோடு கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.

கீழ்படிதல்: ஆண்டவர் கூட தன்னுடைய தகப்பனோடு 30 வருடங்கள் வீட்டிலிருந்து உதவி செய்தார். பின்பு மூன்றறை வருடங்கள் ஆண்டவருடைய ஊழியத்தை செய்து அநேக அற்புத அடையாளங்களோடு செய்து ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து நடந்தார். எவ்வளவு பெரிய கீழ்படிதல் (ஆதியாகமம் 12: 1-4) கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னபடியே அவர் தேசத்தை விட்டு தனக்கு குறித்த முன்பின் தெரியாத தேசத்திற்கு கீழ்படிந்து போனார் என்று பார்க்கிறோம் (ஆதியாகமம் 22: 2,12)வசனங்களில் ஆபிரகாம் தன் மகனை ஆண்டவருக்கு பலியிடுவதற்காக கீழ்படிந்து மோரியா மலைக்கு சென்றார். அதனால் ஆபிரகாமுக்கு எல்லா ஆசிர்வாதமும் கிடைத்தது என்று பார்க்கிறோம். வளைந்து கொடுக்கிற நாணல் சிறியதாய் இருந்தாலும் வெள்ளம் வற்றியவுடன் தலைநிமிர்ந்து நிற்கிறதை காணலாம் அதுபோல பிரியமானவர்களே நாம் எதிர்த்து நிற்கும்போது இருந்த இடம் தெரியாமல் போய்விட நேரிடலாம் நாணலை போல வளைந்த கீழ்படிய கற்றுக் கொள்வோம். இந்த வருடத்தின் நாம் இந்த மூன்று குணங்களையும் ஜெபித்து பெற்றுக் கொள்வோமாக கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீரவதிப்பாராக! ஆமென்.

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு










# சபையோருக்கு 2017 ஆம் ஆண்டின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

**செயற்குழு உறுப்பினர்கள்**

சபை ஊழியர் – சகோ. **ஸ்டாலின்**

**66021072**

செயலாளர் – சகோ. **ஜெகநாதன்**

**23917287 - 66889535**

பொருளாளர்– சகோ. **எபநேசர்**

**23922058 - 66857827**

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . **தயா இயேசுரெத்தினம்**

**23924262 - 94974732**

வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. **ஆரோக்கியராஜ்**

**66159784**


Church Website Address - ahmaditamilcongregation.org

Church ‘E’ mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.


Private Circulation only